# முதலாவது அனைத்துலகத் தமிழியல் ஆய்வு மாநாடு 2020

# "வரலாற்றுப் போக்கில் தமிழியல் ஆய்வுகள்"

## ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு

**பதிப்பாசிரியர்கள்**
பேராசிரியர். ம. இரகுநாதன்
திரு. ஈ. குமரன்
திரு. க. அருந்தாகரன்

10, 11 ஜனவரி 2020
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.

| | | |
|---|---|---|
| **நூற்பெயர்** | : | **"தமிழியல் ஆய்வுக்கட்டுரைத் தொகுப்பு"** |
| **மொழி** | : | தமிழ் |
| **பதிப்பாசிரியர்கள்** | : | பேராசிரியர். ம. இரகுநாதன் |
| | | திரு. ஈ. குமரன் |
| | | திரு. க. அருந்தாகரன் |
| **முதற்பதிப்பு** | : | 10 ஜனவரி 2020 |
| **வெளியிடுவோர்** | : | தமிழ்த்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், |
| | | யாழ்ப்பாணம், இலங்கை. |
| **பக்க அளவு** | : | B5 |
| **பக்கங்கள்** | : | 829 |
| **அச்சிட்டோர்** | : | கரிகணன் (தனியார்) நிறுவனம், |
| | | இல. 672B, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். |
| ISBN | : | 978-955-44441-3-3 |

# பேராசிரியர் ஆ. வேலுப்பிள்ளையின் தமிழ்க் கல்வெட்டுப் பணிகள் - ஓர் ஆய்வு

**திருமதி சாந்தினி அருளானந்தம்**
வரலாற்றுத்துறை
யாழ். பல்கலைக்கழகம்.
*mathushanthini@yahoo.com*

**அறிமுகம்**

இலங்கைத்தமிழர் வரலாறு பற்றிய நீண்ட தொடர்ச்சியான வரலாற்று எழுத்தியல் இல்லாமையால் தொல்பொருட்சான்றுகளின் அடிப்படையிலேயே தமிழரின் மொழி, பண்பாடு, பாரம்பரியம் போன்ற இன்னோரன்ன விடயங்களை அறியமுற்படும் நிலை காணப்படுகின்றது. இப்பின்னணியில் கல்வெட்டுகள், நாணயங்கள் மண்பாண்டங்கள், கட்டடங்கள், சிற்பங்கள், ஓவியங்கள் போன்றவற்றை உள்ளடக்கிய தொல்லியல் சான்றுகளின் உதவியுடன் இலங்கைத்தமிழர் வரலாறு துலக்கமடையத் தொடங்கியுள்ளது. பாளிஇலக்கியங்களில் தமிழர்வரலாறு பெருமளவுக்குப் புறக்கணிக்கப்பட்டநிலையில் இலங்கையில் தமிழரின் தொன்மையையும் வரலாற்றையும் அறிந்து கொள்வதற்கு கல்வெட்டு ஆய்வுகள் மிகப்பெரிய பங்களிப்பை வழங்கிவருகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் முதலில் வெளிநாட்டவர்களான ஐரோப்பியர்களும் பின்னர் இந்திய மற்றும் சிங்கள கல்வெட்டாய்வாளர்களும் சுதேச கல்வெட்டுக்களை ஆராய முயன்றனர். 20ஆம் நூற்றாண்டின் அரைப்பகுதியை தாண்டி ஈழத்து தமிழ்அறிஞர்களும் அப்பணியில் ஈடுபடத்தொடங்கினர். பேராசிரியர் கணபதிப்பிள்ளையை முன்னோடியாகக் கொண்டு பலர் இத்துறையில் கவனம் செலுத்தினர். குறிப்பாகப் பேராசிரியர் வேலுப்பிள்ளையின் பணிகள் தமிழ்க்கல்வெட்டுகளின் ஆய்வில் முக்கியமான திருப்பமாக அமைந்ததெனலாம். வேலுப்பிள்ளையின் கல்வெட்டு ஆய்வுகளை கண்டறிவதாகவும், தமிழர் வரலாற்றுக்கு அவர் வழங்கிய பங்களிப்பை மதிப்பீடு செய்வதாகவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வறிஞரால் ஆக்கப்பட்டு வெளியிடப்பட்ட கல்வெட்டுத் தொடர்பான நூல்கள், கட்டுரைகள், மற்றும் வெளியீடுகளை முதன்மைத்தரவுகளாகவும், இவ்விடயம் தொடர்பாக வெளியிடப்பட்ட ஆக்கங்களை இரண்டாம் நிலைத்தரவுகளாகவும் கொண்டு பகுப்பாய்வு, விபரண ஆய்வு என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்:**- கல்வெட்டு, தமிழ்மொழி, இலக்கியம், வரலாறு, தமிழகம்

## அறிமுகம்

இலங்கைத் தமிழ்க்கல்வெட்டுகளின் வரலாற்றிலும், இலங்கைத்தமிழரின் வரலாற்றாய்விலும் பேராசிரியர் வேலுப்பிள்ளையின் பணிகள் முக்கியமானவையாகக் காணப்படுகின்றன. கல்வெட்டுத்துறை சார்ந்து பல்வேறு பணிகளை முன்னெடுத்த வேலுப்பிள்ளை ஏறக்குறைய 15ஆண்டுகள் அத்துறையில் அனுபவத்தைப் பெற்றுக்கொண்டதன் பின்னணியில் தமிழ்க்கல்வெட்டு வாசிப்பு, தொகுப்பு, ஆராய்ச்சி முதலிய பணிகளில் ஈடுபட்டிருந்தமை தமிழரின் மொழி, வரலாறு, பண்பாடு என்பவற்றுக்கு மிகப்பெரிய பங்களிப்பை வழங்கியுள்ளது. இலங்கைத்தமிழர்களின் மொழியைப்பற்றி மட்டுமல்லாது அவர்களின் சமயம், பண்பாடு, வரலாறு போன்ற துறைகள் சார்ந்தும் இவருடைய ஆய்வுகள் கவனத்துக்குரியவாகக் காணப்படுகின்றன. இலக்கியங்கள் பலவற்றை தந்துள்ள வேலுப்பிள்ளை கல்வெட்டுகளை அடிப்படையாகக் கொண்டு தமிழ்மொழி, இலக்கணம், பற்றிய ஆய்வுகளோடு மட்டும் நின்றுவிடாது தமிழரின் வரலாறு குறித்தும் கவனம் செலுத்தியிருந்தார். 1959இல் இலங்கைப் பல்கலைக்கழகம் என அழைக்கப்பட்ட பேராதனைப் பல்கலைக்கழத்தில் தமிழ்த்துறையில் உதவிவிரிவுரையாளராகத் இணைந்து கொண்டார். 1961இல் இலங்கை சிவில் சேவைப்பரீட்சையில் சித்திபெற்ற மூவரில் ஒருவராக இருந்தபோதிலும் அதனை நாடாது கல்விசார்துறையில் தொடர்ந்தும் பணிசெய்வதையே விரும்பினார். தமிழகத்திலுள்ள அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் சென்னைப் பல்கலைக்கழகத்திலும் கல்வி கற்றது மட்டுமன்றி, மைசூரிலுள்ள தொல்லியல் திணைக்களத்தில் தமிழ் தொல்லெழுத்து தொடர்பான பயிற்சிகளையும் கல்வெட்டாய்வு தொடர்பான பயிற்சிகளையும் பெற்றார். இக்காலத்தில் வரலாற்றுத்துறையின் பேராசிரியராகவும் கல்வெட்டாய்வாளராகவும் விளங்கிய இந்திரபாலாவும் இவருடன் பயிற்சிபெற்றமை குறிப்பிடத்தக்கது. இதன் பின்னணியிலேயே கல்வெட்டுப் பதிப்பாளர்களாகவும் இவர்கள் பணியாற்ற முடிந்ததெனலாம்.

ஆய்வுப்புல ரீதியாக மதிக்கப்படும் வேலுப்பிள்ளை, "அறிவுவளர்ச்சிக்குப் பல கலையறிவும் பல துறை அறிவும் அவசியம்" என்பதை வலியுறுத்தியது மட்டுமன்றி தாமும் அத்தகைய பின்புலத்தைக் கொண்டிருந்தமையை அவதானிக்கலாம். "என்னுடைய சிறப்புக்கற்கை தமிழ்க்கல்வெட்டுகளுடைய மொழியாகவும் பட்டமேற்படிப்புக்களாகவும் உள்ளது. நான் தமிழ்கல்வெட்டுகளுடைய மொழியில் பணியாற்றியிருக்கின்றேன். இதுமட்டுமல்லாது அண்மையில் கல்வெட்டுக்களும் தமிழ் படிப்பும் என்ற நூலையும் தமிழ்மொழியில் வெளியிட்டிருக்கின்றேன். எனவே இந்தப்புத்தகத்தில் இலங்கைத் தமிழ்க்கல்வெட்டுகளை முதன்மையான மொழிமாணவர் என்ற முறையில் ஆய்வு செய்துள்ளேன்"(Velluppillai.A.,1971,p.iii). இவ்வாறு மொழியில் தனக்கிருந்த அறிவை கூறுவதனூடாக கல்வெட்டுகளைப் பதிப்பிக்கும் தகுதிப்பாட்டினை விளங்கவைப்பதனைக் காணலாம். தொல் எழுத்தறிவு, தமிழ்மொழியறிவு, கிரந்த எழுத்துக்களின் பரிட்சயம், பாளி மற்றும் சமஸ்கிருத மொழியறிவு என்பன கல்வெட்டாய்வின் தனிப்புலமையாக இருந்தமையை இவரது ஆய்வுகளிலிருந்து அறியலாம். திராவிட மொழியறிவு என்பது இவரது கலாநிதிப்பட்ட ஆய்வின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டது. பல ஆண்டுகள் கல்வெட்டுத் தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டமை அத்துறையில் சிறப்புத்தேர்ச்சியுடையவராக விளங்கவும் கல்வெட்டுத்

தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவும், கல்வெட்டுகளையும் இலக்கியங்களையும் தொடர்புபடுத்தி ஆராயவும் தூண்டுதலாக அமைந்திருந்ததெனலாம்.

**வரலாற்று ஆய்வுகள்**

ஓர் இனத்தின் அடையாளம் மொழி. தமிழ்மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் தமிழர்கள். இலங்கையின் வடகிழக்கும், தமிழகமும் தமிழர்கள் செறிந்துவாழும் பிரதேசங்களாகும். தமிழ்மொழியின் வரலாறென்பது, அம்மொழியின் பழைமை பெருமை சிறப்பியல்புகளும், அது வழங்கும் நாட்டின் அமைதிவழக்க ஒழுக்கங்களும், அதன் மக்களது வாழ்க்கைச் செல்வங்களுமாகும் (சுப்பராயலு.எ.,இராசு.செ.,(பதி)2001,47). எனவே அம்மொழியின் வரலாற்றை ஆராய்வதானது அம்மொழி சார்ந்த மக்களின் வரலாற்றை ஆராய்வதாக அமையும். எனவே வேலுப்பிள்ளை கல்வெட்டுத்துறையில் தமிழ்மொழி சார்ந்து மேற்கொண்ட ஆய்வுகள் தமிழரின் வரலாற்றின் பல பரிணாமங்களை எடுத்துக்காட்டுவதாக அமைகின்றனவெனலாம். இவருடைய வரலாற்றாய்வுகள் இலக்கியம் மற்றும் கல்வெட்டு என்ற இருதளங்களில் அமைந்திருந்ததை அவதானிக்கலாம். யாழ்ப்பாணத்தின் பாரம்பரியமாக சிலாகிக்கப்படும் சைவத்தையும் தமிழையும் மையப்படுத்தியதான பண்பாட்டின் வேர்களை அடையாளங் காண்பதாக “இலங்கைத் தமிழர்களின் கைலாசபாரம்பரியம்” என்ற கட்டுரையை எழுதியிருந்தார். இலங்கைத்தமிழர்களின் தனித்துவத்தை, ஈழத்து சைவத்தமிழ்ப் பாரம்பரியத்தை தமிழ்நாட்டிலிருந்து வேறுபடுத்திநோக்கும் கணபதிப்பிள்ளையின் போக்கை முற்படுத்தும் வேலுப்பிள்ளை அதனை சைவமறுமலர்ச்சி வரை நீடித்துச்செல்வதைக் காணலாம் (வேலுப்பிள்ளை,ஆ.,2009,ப.70). இலக்கியங்களை மையமாக்கொண்ட வரலாற்றாய்வுகளை மேற்கொண்டதைப்போலவே கல்வெட்டுகளிலும் தனது வரலாற்று ஆய்வுப்புலத்தை விரிவுபடுத்தியுள்ளதை அவதானிக்கலாம். உண்மையில் கல்வெட்டுகளை முதன்மைப்படுத்திய ஆய்வானது இலங்கையின் தமிழ்மொழி மற்றும் தமிழர் வரலாறு தொடர்பான வரலாற்றுக்குப் புதியவெளிச்சத்தைத் தருவதாகவே அமைந்திருந்தன. இலங்கையில் கிடைத்த பிராமிக் கல்வெட்டுகள், பிற கல்வெட்டுகள், செப்பேடுகள் பற்றி மட்டுமன்றி தென்னிந்திய குறிப்பாக தமிழகக் கல்வெட்டுக்கள் தொடர்பாகவும் ஆய்வுகளை மேற்கொண்டிருந்தார். இவ்வாய்வுகள் இலங்கைத் தமிழர் வரலாற்றிலும், தமிழகத் தமிழர் வரலாற்றிலும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஆய்வுப்புல விருத்தியை ஏற்படுத்தியிருந்தன.

**கல்வெட்டுகள் பற்றிய நோக்கு**

வரலாற்று ஆய்வுகளை மேற்கொள்வதற்குச் சான்றாதாரங்களின் துணை அவசியமாகும். இலக்கியங்கள் மற்றும் தொல்பொருட்சான்றுகள் வரலாற்றாய்வில் பயன் படுத்தப்படுகின்றபோதிலும் தொல்பொருட் சான்றுகளான கல்வெட்டுகளே நம்பகரமான செய்திகளை அறியத்தருவதோடு கூடுதலான தகவல்களையும் வழங்குகின்றன. கல்வெட்டுகள் என்பது மேலெழுந்தவாரியாக நோக்கும்போது பெருமளவுக்கு கற்களில் செய்திகளைப் பொறிப்பதைச் சுட்டுகின்றது. ஆனால் மட்பாண்ட ஓடுகளிலும், செப்புத்தகடுகளிலும் பொன் தகட்டிலும், விளக்கு, பாத்திரங்கள், தட்டுகள் போன்றவற்றிலும் எழுதப்பட்டிருப்பதை சாசனங்கள்

எனக் குறிப்பிடுவர். இவற்றை தெளிவாக வரையறை செய்யும் முயற்சியை வேலுப்பிள்ளையின் ஆய்வுகளில் காணலாம். “சாசனம் என்பது வடமொழிச்சொல். சாசனம் என்பதற்குப் பதிலாக கல்வெட்டு என்ற தமிழ்ச்சொல் வழங்கப்படுவதுண்டு. சாசனங்களில் பெரும்பாலன, கல்லில் வெட்டப்பட்டனவாதலால் அப்பெயர் வழக்கிற்கு வந்திருக்க வேண்டும்” எனக்குறிப்பிடுகின்றார் (வேலுப்பிள்ளை.அ.,1971,ப.vi) இருப்பினும் கல்லில் வெட்டப்படாத செப்புப்பட்டயம் முதலியவற்றையும் சாசனம் என்ற சொல்லால் சுட்டுகின்றார். இக்கருத்தை நோக்குமிடத்து கல்வெட்டு என்பதனுள் செப்பேட்டையும் உள்ளடக்கிய வகையில் சாசனம் என்ற பொதுச் சொல்லைத் தமது சாசனமும் தமிழும் என்ற நூலில் பெருமளவுக்குப் பயன்படுத்துவதைக் காணலாம். செப்புத்தகட்டில் எழுதப்படுபவை செப்பேடு எனக் குறிப்பிடப்படுகின்றதெனினும் செப்பேட்டுச் சாசனம் என்ற வழக்கும் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை இவருடைய தமிழ்மொழியிலமைந்த பிற ஆய்வுகளில் கல்வெட்டு என்ற தமிழ்ப்பதமும், ஆங்கில ஆய்வுகளில் கல்வெட்டு என்பதைச் சுட்டும் inscription என்ற ஆங்கிலப் பதமும் பெருமளவுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளமை கவனிக்கத்தக்கது.

ஒவ்வொருகாலத்திலும் நிலவி வந்த அரசியல், சமுதாய, பொருளாதாரச் சூழல் அவ்வவ் கால கல்வெட்டுகளின் வடிவங்களை நிர்ணயித்தது. இத்தகைய காரணத்தினால்த்தான் கல்வெட்டுகளை வரலாற்றுச் சான்றுகளாகக் கொள்ளமுடிகின்றது (சுப்பராயலு.எ.,இராசு. செ.,2001,ப.59). எனவேதான் வேலுப்பிள்ளை தமது ஆய்வுகளுக்குக் கல்வெட்டுகளைப் பயன்படுத்தியிருந்தார். “பனையோலையில் எழுப்பட்ட காலத்தில் எழுத்துள்ள ஒரு பனையோலை பழுதுபட, புதிய ஓலையில் அது மீளவும் எழுதப்படும்போது எழுதப்படும் காலத்திலுள்ள மொழியே பின்பற்றப்படும் ஆனால் கல்வெட்டுக்கள் சம்பவம் நடந்த காலத்திலேயே அதுபொறித்தபடியே தொடர்ந்தும் காணப்படுவதால் அதன் மூலம் தமிழின் வரிவடிவத்தை அறிந்து கொள்ளமுடியும்” (வேலுப்பிள்ளை,ஆ.,1971,ப.1-2). தமிழ்மொழியை ஆராய்வதற்குக் கல்வெட்டுகள் வாய்பாக அமைவதையும், இலக்கியங்களை விடக் கல்வெட்டுகள் உறுதியான சான்றாதாரங்கள் என்பதையும் இக்கருத்துத் தெளிவாக்குகின்றது.

**கல்வெட்டு - இலக்கிய ஒப்பீட்டு ஆய்வு**

தமிழ்இலக்கியங்களையும் தமிழ்க்கல்வெட்டுகளையும் ஒப்பிட்டு தமிழர் மற்றும் தமிழ்மொழி வரலாற்றைக் கண்டுகொள்ளும் முயற்சி பற்றி முதன்முதலாக மகாவித்துவான் மு.இராகவையங்கார் சென்னைப் பல்கலைக்கழகத்தில் 1929இல் ‘இலக்கிய சாஸன வழக்காறுகள்’ என்ற தலைப்பில் சொற்பொழிவில் எடுத்துரைத்தார். கல்வெட்டுகளையும் இலக்கியங்களையும் ஒன்றோடொன்று தொடர்புபடுத்தி வரலாற்று நோக்கில் ஆராயவேண்டும். (சுப்பராயலு.எ.,இராசு.செ.,2001,ப.அறிமுகம்) சாஸனங்கள் முன்னோரது அறச்செயல்களை மட்டுமன்றித் தமிழ்மொழியின் உள்ளீடான நுண்பொருளையும், வெளியீடுகளான பருப்பொருள்களையும் அறிவதற்கு பேருதவி புரிவனவாயுள்ளன. ஆனால் தமிழ்வரலாறுகளை அறிவதற்கு இவை பெருங்கருவிகளாக வேண்டப்படுகின்றன. (மேற்படி, ப.49) மேலும்,

“அவ்விரண்டும் ஒன்றுக்கொன்று இன்றியமையாதனவாதலால், அவை ஒப்ப மதித்துப் போற்றக்கூடியன என்பதேயாம். சாஸன வழக்கெல்லாம் இலக்கியத்துடனும், இலக்கிய வழக்கெல்லாம்சாஸனத்துடனும்ஒன்றியைந்தும்,ஒன்றையொன்றுவிளக்கியும்செல்லுமானால், இந்நம்பிக்கை கொள்ளத் தடையென்னை? ஆகவே, அவ்விரண்டும் ஒன்றனையொன்று உணர்ந்து கொள்ளுதற்கு இன்றியமையாதன என்பது பெறப்படுகிறது”(மேற்படி, ப.50).

என இராகவையங்கார் முன்வைத்த இக்கருத்தை இலங்கையிற் முழுமையாகச் செயற்படுத்தியவர் வேலுப்பிள்ளை எனத் தயக்கமின்றிக் கூறலாம். இருப்பினும் அவரது ஆசிரியாராக விளங்கிய கணபதிப்பிள்ளை இதற்கு முன்னோடியாக ஏறக்குறைய மூன்று சாசனங்களை ஆராய்ந்து இப்பணிக்கு வித்திட்டதுமன்றி, வேலுப்பிள்ளையை அப்பணியில் ஊக்குவித்தமையும் குறிப்பிடத்தக்கது. கணபதிப்பிள்ளை மகனை, மொரகாவலை, பாண்டுவஸ்நுவர போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்ட தமிழ்க்கல்வெட்டுக்கள் தொடர்பாக எழுதிய கட்டுரைகள் university of ceylon review சஞ்சிகையில் 1960,1962 இதழ்களில் வெளியிடப்பட்டன. இப்பணி அவரின் மாணவர்களாகிய இந்திரபாலா, வேலுப்பிள்ளை போன்றவர்களுக்கு தூண்டுதலளித்திருந்தன. கணபதிப்பிள்ளையின் வழிகாட்டலிலும் இலண்டன் பல்கலைக்கழகத்தின் மொழியியல் பேராசிரியர் ரி.பறோ என்வரின் வழிகாட்டலிலும் கல்வெட்டுகளில் இருகலாநிதிப்பட்ட ஆய்வுகளை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வகையில் இலங்கையில் தமிழ்த்துறையில் இரண்டு கலாநிதிப்பட்டங்களைப் பெற்ற முதலாவது தமிழ்அறிஞர் என்ற சிறப்பு இவருக்குண்டு. இவ்வறிவின் பின்னணியில் சாசனமும் தமிழும் போன்ற நூல்களையும் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதுமட்டுமன்றித் அந்நூலை, “சாசனத் தமிழ்மொழி ஆராய்ச்சியில் முதல்வராக விளங்கியவரும், இலங்கைப் பல்கலைக்கழகத்திலே சாசனத் தமிழை முதலிலே கற்பித்தவரும் தம் ஆசிரியருமான காலஞ்சென்ற பேராசியர் க.கணபதிப்பிள்ளைக்குச் சமர்ப்பணம்” ஆக்கியுள்ளமை அவரது நன்றியுணர்வினைப் புலப்படுத்துகின்றது.

தமிழியலுக்கும் தொல்பொருளியலுக்கும் நெருக்கமான தொடர்புண்டு என்பதை பேராசிரியர் சிவசாமி 1972இல் எழுதிய கட்டுரையொன்றில் எடுத்துக்காட்டுகின்றார் (சிவசாமி.வி.,1972,ப.31) அதனை தொல்பொருள்களில் ஒன்றான கல்வெட்டு ஆய்வின் வாயிலாக நிலைபெறச் செய்தவர் வேலுப்பிள்ளை. தமிழியலுக்கான கல்வெட்டுச் சான்றுகள் என்ற நூலில் சிங்களபிராமியின் செல்வாக்கின்றி, பழைய தமிழ்ப்பிராமி எழுத்துக்களிலிருந்து தமிழ்எழுத்துக்கள் உள்வாங்கப்பட்டோ சீர்திருத்தப்பட்டோ இருக்கவேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார் (Velluppillai,A.,1980,pp.1-25) அத்தோடு தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையிலான தொடர்பினை கல்வெட்டு சான்றுகள் வாயிலாக எடுத்துக்காட்டினாலும் பாளி இலக்கியங்களையும் துணையாகக் கொள்வது குறிப்பிடத்தக்கது. மேலும் பௌத்தம், சமணம் என்பவற்றின் தொடர்புகள் தமிழ், தமிழர் மீது ஏற்படுத்திய செல்வாக்கை கல்வெட்டுகளினூடாக சுட்டிக்கட்டும் வேலுப்பிள்ளை நூலின் இறுதிப்பகுதியில் தமிழ்மொழியின் வரலாற்றைக் கூறுவதோடு நிறைவு செய்கின்றார். இவ்வாறு தமிழின் வளர்ச்சிப் போக்கை கல்வெட்டுக்களை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுத்தமை பலஆய்வுகளுக்குக் களமமைத்துக் கொடுத்தமை எனலாம்.

சாசனங்களுடன் இலக்கியங்களை தொடர்புபடுத்தி ஆராய்வது அவசியமானது என்பதற்கு வேலுப்பிள்ளை சில எடுத்துக்காட்டுகளை முன்வைக்கின்றார். ஈழத்துத் தமிழிலக்கிய வளர்ச்சி என்ற நூலின் ஆசிரியர் கல்வெட்டுச் செய்யுட்களை எடுத்துக்காட்டத் தவறியுள்ளார் என்றும், தமிழ்க்கல்வெட்டுகள் அதிகமாக காணப்படும் இடங்களிலும் தமிழர்கள் அதிகமாக வாழ்ந்திருப்பர் என்பதை ஆசிரியர் உணர்ந்திருந்ததாகத் தெரியவில்லை என்றும் சுட்டிக்காட்டுகின்றார். (வேலுப்பிள்ளை.அ.,2009,ப.8). இவ்வாறான குறைகளை நிவர்த்தி செய்தே, அதாவது கல்வெட்டுக்களையும் சான்றாகப் பயன்படுத்தி, ஈழத்துப்பழைய இலக்கியங்கள் வரலாறு தேடல் நூலைத் தாம் எழுதியதாக முகவுரையில் குறிப்பிடுகின்றார்.

வேலுப்பிள்ளையின் கல்வெட்டு ஆராய்ச்சியில் சோழர்காலத் தமிழ்இலக்கணத்தை ஒப்பிட்டு ஆராய்ந்தமையும் குறிப்பிடத்தக்க பணியாக அமைந்திருந்தது. தமிழ் வரலாற்றிலக்கணத்தை எழுதிய இவர் சோழர்காலத்தில் எழுந்த வீரசோழியத்தைப் பேச்சுத்தமிழுக்குரிய இலக்கணமாக எடுத்துக்காட்டி, கல்வெட்டுத் தமிழோடு ஒப்பிட்டு ஆய்வினை முன்னெடுத்திருந்தார் (Vellupillai.A.,1967,pp.89-95) கல்வெட்டுக்களில் கையாளப்பட்ட பேச்சுத்தமிழை வீரசோழியத்தோடு ஒப்பிட்டு, ஆராய்ந்ததன் வாயிலாக வீரசோழியம் கல்வெட்டுத் தமிழுக்கான இலக்கணம் என்பதை நிறுவியமை எடுத்துக்காட்டத்தக்கது. "தமிழ்க்கல்வி தமிழ்ச்சாசன அறிவின்றிப் பூரணத்துவம் பெறாது – தமிழ் இலக்கியவளத்திற்கு தமிழ்ச்சாசன வளம் குறைந்ததன்று" என்பதை குறிப்பிடும் வேலுப்பிள்ளை, கல்வெட்டாய்வுக்கு முதன்மையும் முக்கியத்துவம் கொடுத்ததனால் தமிழ்மொழி மற்றும் தமிழர் வரலாற்றினை வெளிப்படுத்திய திறன் போற்றக்குரியதாகும்.

**தமிழக கல்வெட்டாய்வுகள்**

வேலுப்பிள்ளை தமிழகத்தில் கிடைத்த தமிழ்க்கல்வெட்டுகளைத் தனது கலாநிதிப்பட்ட ஆய்வுக்காகத் தேர்ந்தெடுத்திருந்தார். தமிழகத்தை அடிப்படையாகக் கொண்ட கல்வெட்டாய்வுகளை நோக்குமிடத்து இவரது முதலாவது கலாநிதிப்பட்ட ஆய்வு பாண்டியர்களது கல்வெட்டுகளாக அமைந்திருப்பதைக் காணலாம். பிற்காலப் பாண்டிய மன்னர் சிலரின் தமிழ்ச்சாசனங்களின் மொழியை A Study of the Language of Tamil Inscriptions of Catavarman Cuntarapantiyan and Maravarman Kulacekaran (1251-1350AD) என்ற தலைப்பில் ஆராய்ந்துள்ளார். இரண்டாவது கலாநிதிப்பட்ட ஆய்வு A study of the language of Tamil inscriptions of the period 800.to 920 AD.என்பதாகும். 1962இல் சமர்ப்பிக்கப்பட்ட இவ்வாய்வில் பல்லவ, பாண்டிய மற்றும் சோழ பேரரசுக்குரிய கல்வெட்டுகளையும் கொங்கு தேசத்தை ஆட்சிசெய்த வாணர், கங்கர் போன்ற பிறஅரசர்களின் கல்வெட்டுகளையும் உள்ளடக்கி 173 கல்வெட்டுகளை தனது ஆய்வுக்குப் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வின் இறுதிப்பகுதியில் தரப்பட்ட இணைப்பில் 178 பக்கங்களில் அக்கல்வெட்டுகளிலுள்ள பிரதானமான சொற்கள் பட்டியலிப்பட்டுள்ளது. (Vellppillai.A.,1964,pp.463-641). இவற்றிலிருந்து அக்காலத்தில் புழக்கத்திலிருந்த சொற்களையும், அதனூடாகத் தமிழ்மக்களின் பண்பாட்டு வாழ்வினையும் மதிப்பிட முடியும். இவ்விரு கலாநிதிப்பட்ட ஆய்வுகளும் தமிழககல்வெட்டுகளை மையப்படுத்தி

மேற்கொண்டமை தமிழ்மொழியின் வளர்ச்சியை அறிவதை அடிப்படையாகக் கொண்டபோதும் தமிழர் வரலாற்றின் பலஅம்சங்ளை வெளிப்படுத்தியமை முக்கியமான பணியெனலாம். தமிழர்சமய வரலாற்றை எழுதிய வேலுப்பிள்ளை, அதில் தமிழகத்திலுள்ள திருச்செந்தூர்க் கல்வெட்டாய்வினையும் இணைத்துள்ளார். சோழர்காலத்துக்கு முன்னர் வெளியிடப்பட்ட கல்வெட்டுக்ளில் நீண்டதாக காணப்படும் இக்கல்வெட்டு, பல்லவர் காலத்திலிருந்து சோழர் கால முடிவுவரை உள்ள காலப்பகுதியில் முருகன் பற்றி எந்தவிதமான குறிப்புக்களும் கிடைக்காத நிலையில், புதிய வெளிச்சத்தைத் தரும்வகையில் முக்கியத்துவம் பெறுகின்றது. பாண்டிநாட்டின் பழைய தலைநகராகிய கொற்கைக் கடற்கரையில் திருச்செந்தூர்க் கோயில் இருந்திருக்கலாம் என்பதற்கு இக்கோயிலின் அமைவிடத்தை சான்றுகாட்டும் வேலுப்பிள்ளை, கல்வெட்டு வட்டெழுத்து முறையில் எழுதப்பட்டுள்ளதைக் கொண்டு, 9ஆம் நூற்றாண்டுக்குரியது என்ற முடிவுக்கு வருவதைக் காணலாம். (வேலுப்பிள்ளை.ஆ.,1985,ப.168) பிறகல்வெட்டு ஆதாரங்களோடு ஒப்புநோக்கி இக்கல்வெட்டு குறிப்பிடும் தானத்தை, இரண்டாம் வரகுணபாண்டியன் என்ற மன்னன் கி.பி.873இல் வழங்கினான் என்பதை நிறுவுகின்றார். இவை யாவும் வேலுப்பிள்ளையின் தமிழகத்திற்குரிய கல்வெட்டாய்வுகளுக்குச் சான்றாகின்றன.

**இலங்கைக் கல்வெட்டாய்வுகள்**

**பிராமிக்கல்வெட்டு ஆய்வு**

இலங்கைக் கல்வெட்டுகளில் பழமையான கல்வெட்டுகள் பிராமிக்கல்வெட்டுக்களாகும். கி.மு 3ஆம் -கி.பி.3ஆம் நூற்றாண்டுக்குரியதாகப் பொதுவாகக் கருதப்படும் இவை பிராகிருதமொழியில் பிராமி வரிவடிவத்தில் எழுதப்பட்டவையாகும். பிராமிக்கல்வெட்டுகளின் தொகுப்பிலும் அவை பற்றிய ஆராய்ச்சியிலும் முக்கியபங்கினை வகித்த பரணவிதான இலங்கைக்கும் தமிழகத்திற்கும் இடையிலான பாரம்பரிய வரலாற்றுத் தொடர்பை மறந்தநிலையில் இலங்கைப்பிராமிக்கு வடபிராமி, அசோகபிராமி எனப்பெயரிட்டு, சிங்கள மக்களின் மூதாதையினர் வடஇந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்ததற்கு அக்கல்வெட்டெழுத்தை ஒரு சான்றாகக் காட்டியுள்ளார். அத்துடன் கல்வெட்டுகளுக்குரிய பிராகிதமொழியை சிங்களமொழியின் பழைய வடிவம் எனவும், இவை காணப்படும் இடங்களிலெல்லாம் சிங்களமக்களே வாழ்ந்தனர் எனக்குறிப்பிட்டார். (Paranavithane.P.,1970,xvi.) இருப்பினும் அவை தமிழ் சிறப்பெழுத்துக்களைக் கொண்டிருப்பது போன்ற காரணங்களின் பின்னணியில் தமிழகபிராமியோடு நெருக்கமுடையதென்பதையும் தமிழகத்திற்கும் இலங்கைக்குமிடையில் பண்பாட்டு உறவுகள் இருந்தென்பதையும் சுப்பராயலு, இராஜன், மற்றும் பத்மநாதன், இரகுபதி, புக்ஷ்பரட்ணம் போன்றோர் எடுத்துக்காட்டிப் பல ஆய்வுக்கட்டுரைகளையும் எழுதியுள்ளனர். இவர்களுக்கு முன்னதாக வேலுப்பிள்ளை இலங்கைப் பிராமிக்கல்வெட்டுகளை அடிப்படையாகக்கொண்டு தமிழின் செல்வாக்கு, இலங்கைக்கும் தமிழ்நாட்டுக்கும் இடையிலான உறவு என்ற இரண்டு விடயங்களைத் தெளிவுபடுத்தியுள்ளார் (Vellupillai.A.,1979-1980,pp.63-75). குறிப்பாக பண்டைய இலங்கை வரலாற்றிலுள்ள சிக்கல்களை மையப்படுத்திய வகையில் பிராமிக்கல்வெட்டுக்கள் தொடர்பான ஆய்வினை மேற்கொண்டார். இவ்வாறாகப் பலகட்டுரைகளில் சுட்டிக்காட்டிய

பலதமிழ்ப்பெயர்களே பின்வந்த ஆராய்வாளருக்கு முன்னோடியாக இருந்ததெனப் புஷ்பரட்ணம் குறிப்பிடுகின்றார் (புஷ்பரட்ணம்.ப.,2001,ப.17). எனவே பிராமிக்கல்வெட்டு ஆய்விலும் வேலுப்பிள்ளையின் பணி முதன்மை பெறுகின்றதெனலாம்.

**செப்பேட்டு ஆய்வு**

இலங்கை வரலாற்றில் சர்ச்சைக்குரிய செப்பேடாக வல்லிபுரம் பொன்னோடு காணப்படுகின்றது. 1936இல் வடஇலங்கையில் வல்லிபுரத்தில் கிடைக்கப்பெற்ற இத்தகட்டின் வரலாற்று முக்கியத்துவம் கல்வெட்டில் சிறப்புத்தேர்ச்சி பெற்ற வரலாற்றறிஞரான செனரத் பரணவிதானவினால் வாசிக்கப்பட்டு, வெளிடப்பட்டது. ஆனால் இச்செப்பேடு வடஇலங்கையில் சிங்களவரின் ஆதிக்கம் இருந்தமைக்கான சான்றாகவே எடுத்துக்காட்டப்பட்டது. குணசிங்கம், அதற்கு அவ்வளவு முக்கியத்துவம் கிடையாதென்பதை அது கிடைத்த இடம், வழங்கப்பட்ட சூழ்நிலை, மொழி என்பவற்றை அடிப்டையாகக் கொண்டு பரணவிதானாவின் விளக்கம் மிகைப்படுத்தப்பட்டதெனக் குறிப்பிடுகின்றார் (குணசிங்கம்.,செல்லத்துரை,1977,ப.5-7) இப்பொன்னேட்டை மேலும் ஆய்வுக்குட்படுத்திய வேலுப்பிள்ளை புதியவிளக்கங்களை முன்வைத்தார். குறிப்பாக தாம் பரணவிதானவின் அதிகமான மிகைப்படுத்தலை எடுத்துக்காட்ட முற்படுவதாகக் குறிப்பிடுவது கவனத்திற்குரியதாகும் (Velluppillai.A.,1981,p.3) Tamils in ancient Jaffna and vallipuram gold plate என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையில் பொன்னேட்டில் இடம்பெறும் சொற்களை மொழியியல் அடிப்படையில் விளக்குவதோடு, திராவிடமொழிகளோடும், சங்கஇலக்கியத்தோடும் தொடர்புபடுத்துவதைக் காணலாம். யாழ்ப்பாணத்திலுள்ள கந்தரோடை, வல்லிபுரம் போன்ற இடங்கள் பிற்காலத்தில் சிங்களபௌத்தத்தோடு தொடர்புபடுத்தப்பட்டபோது, பௌத்தம் அறிமுகமாவதற்கு முன்னரே அவ்விடங்கள் திராவிடபண்பாட்டுரிய அம்சங்களைக் கொண்டிருந்தன என்பதை சுட்டிக்காட்டுகின்றார். மேலும் திராவிட மொழிக்குடும்பத்தோடு நெருக்கமுடைய ஆந்திராவை தொடர்புபடுத்துவதும் சுட்டிக்காட்டத்தக்கது. மேற்கு கிழக்கு இந்தியாவிலும் தக்கணத்திலும் பயன்படுத்தப்பட்ட பிராகிருதத்தின் செல்வாக்கு குறிப்பாக ஆந்திராவில் பயன்படுத்தப்பட்ட பிராகிருதத்தின் செல்வாக்கு காணப்படுதல், வல்லிபுரத்தில் கிடைத்த புத்தருடைய உருவம் அமராவதி கலைமரபுக்குரியதாக இருத்தல், நாகபட்டினத்துடனான நாகர்தொடர்பு, நாகபட்டனத்தினதும் வல்லிபுரத்தினதும் துறைமுகத்தொடர்புகள் போன்றவற்றைச் சுட்டிக்காட்டித் தனது கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார். (Vellupillai.A.,1981.pp.4-10). அதன் வாயிலாக ஏறக்குறைய நான்கு தசாப்தங்களாக நிலைபெற்றிருந்த பரணவிதானாவின் கருத்துக்களை மறுதலிப்பதோடு, அவர் வரலாறு தொல்லியல் துறைகளுக்கு அளப்பெரிய பங்களிப்புக்களை வழங்கியுள்ள போதிலும் சமீபத்திய கண்டுபிடிப்புக்கள் அவருடைய நோக்குகளை ஏற்றுக்கொள்ள முடியாதவையாக்கியுள்ளன என்பது வேலுப்பிள்ளையால் நிருபிக்கப்பட்டுள்ளமை தமிழர் வரலாற்றுக்கும் கல்வெட்டுத்துறைக்கும் வழங்கிய பிரதான பங்களிப்பாக அமைகின்றதெனலாம்.

**கோணேசர் கல்வெட்டு**

கல்வெட்டுகளை தனது ஆய்வுக்கு உட்படுத்திய வேலுப்பிள்ளை கல்வெட்டை அடிப்படையாகக் கொண்ட ஒரு இலக்கியத்தையும் ஆராய்ந்துள்ளார். கல்வெட்டினுடைய ஒரு கூறாகிய மெய்கீர்த்தி

என்ற வடிவத்தைப் பயன்படுத்திய நூலாகக் கோணேசர் கல்வெட்டு அமைந்திருப்பதன் பின்னணியில் அவரின் கல்வெட்டுப்பணியோடு இதனையும் இணைத்துக் கூறலாம். மெய்கீர்த்தி என்ற வடிவம் சோழப்பெருமன்னனாகிய முதலாம் இராஜராஜனால் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இலங்கையில் சோழராதிக்கம் ஏற்பட்டதன் விளைவாக அறிமுகமாகிய மெய்க்கீர்த்திகளின் செல்வாக்கினாலேயே கோணேசர் கல்வெட்டு தோற்றியதெனவும், சங்ககால நடுகல் வழிபாட்டின் தொடர்ச்சியெனவும், இம்மரபே இறந்தார் நினைவாக வெளியிடப்படும் நூலின் பெயராக கல்வெட்டு என்ற சொல் வழங்குவதாக எடுத்துக்காட்டுகின்றார் (வேலுப்பிள்ளை.ஆ.,2009,ப.10). ஒரு கல்வெட்டுப்பாரம்பரியம் ஒரு இலக்கியத்தின் தோற்றுவாய்க்கு வழி வகுத்ததென்பதை ஆராய்ந்தமையும் கல்வெட்டுப் பணியின் கூறாகவே நோக்கத்தக்கதாகும்.

### கல்வெட்டுத் தொகுப்பு முயற்சி

கல்வெட்டுத்துறை சார்ந்து மேற்கொண்ட பணிகளில் இன்னொரு சிறப்பானபணி தமிழ்க்கல்வெட்டுக்களின் இரு தொகுப்புக்களாகும். தமிழ்க் கல்வெட்டுகள் தொடர்பாக இலங்கையின் தொல்லியல் திணைக்களம் தனது தொகுப்புக்களில் சில தமிழ்க்கல்வெட்டுகளின் விபரங்களைக் குறிப்பிட்டாலும், இலங்கையில் கிடைத்த தமிழ்க்கல்வெட்டுகள் அனைத்தையும் ஆவணப்படுத்தவோ, வாசிப்புக்கு உட்படுத்தவோ இல்லை. இதனால் பல தமிழ்க்கல்வெட்டுகள் முற்றாக அடையாளம் காணப்படாதநிலை காணப்பட்டது. வேலுப்பிள்ளை தமிழ்க்கல்வெட்டுகளைப் பற்றிய ஆய்வில் ஈடுபட்டமையினால் இலங்கைத் தமிழ்க்கல்வெட்டுகளின தொகுப்பதன் அவசியத்தை உணர்ந்திருந்தார் எனக் கருதமுடிகின்றது. "இலங்கைப் புதைபொருள் ஆராய்ச்சித் திணைக்களத்திலேயுள்ளதமிழ்ச் சாசனங்களை அட்டவணைப்படுத்திப் பார்த்தபோது எண்பத்தைந்து சாசனங்களையே பார்க்கக் கூடியதாக இருந்தது. அங்கு தமிழ்ச்சாசனங்கள் தனியாகப் பிரித்து வைக்கப்பட்டிருக்கவில்லை. தமிழ்ச்சாசனங்கள் பல, கண்டெடுக்கப்பட்ட இடங்களைப் பற்றியும் குறிப்புக்கள் இல்லை. சாசனங்கள் எழுந்த இடங்கள் சிலவற்றை சாசனங்களிலுள்ள அகச்சான்றுகளைக் கொண்டே அறியவேண்டியிருந்தது. சாசனங்கள் சிலவற்றில் அத்தகைய அகச்சான்றுமில்லை. புதைபொருளாராய்ச்சித் திணைக்களம் குறித்து வைத்திருக்கும் இலக்கங்களைக் கொண்ட சாசனங்கள் எவையெவை அத்திணைக்களத்திலுள்ளவையெனக் கண்டுபிப்பதே வில்லங்கமாக இருக்கின்றது. இதுவரையிலே வெளிவந்துள்ள சாசனங்கள் எவையெவை என்பது தானும் சாசனங்களை வாசித்தே அறியவேண்டியுள்ளது" (வேலுப்பிள்ளை.ஆ.,1971,ப..331)

என்ற கருத்தை நோக்கின் வேலுப்பிள்ளையின் கல்வெட்டுத் தொகுப்புப்பணி எத்தகைய முக்கியத்துவமுடையதென்பது புலனாகும். தொல்லியல் திணைக்களத்தால் வெளியிடப்படும் Epigraphica Zeylanica என்ற வெளியீட்டில் அவற்றைப் பிரசுரிக்க 1968,69களில் கல்வெட்டுப்படியை அனுப்பியபோதும் அவை வெளிடப்படாத நிலையில் வேலுப்பிள்ளை தமது சொந்தமுயற்சியால் அவற்றை இருதொகுதிகளாக வெளியிட்டார் (velluppillai. A,1971,p.iii) மேலும் எங்கெங்கு சாசனங்கள் கிடைகின்றன என்ற விபரத்தையும் தந்துள்ளார். இவற்றின் அடிப்படையிலும் கல்வெட்டுக்களின் காலஒழுங்கில் கிடைப்பதாலும்

நீண்டகாலமாக தமிழர்கள் இலங்கையில் வாழ்ந்திருக்கின்றனர் என்பது வேலுப்பிள்ளையின் முடிவாகும் (வேலுப்பிள்ளை.ஆ.,1971,ப.230). தமிழ்கல்வெட்டுப்பணி குறித்துப் பேராசிரியர் பத்மநாதனின் கருத்தின் பிரகாரம் வேலுப்பிள்ளையின் கல்வெட்டுத் தொகுப்பானது, முன்பு பிறர் வாசித்த சாசனங்களில் காணப்படும் பிழைகளை நீக்கி அவற்றின் திருந்திய வாசகங்களை புதிய பதிப்புக்களாக வெளியிட்டமை, சாசனங்களின் படிகளை முதன்முதலாக வாசித்து அவற்றின் வாசகங்களை ஆங்கில மொழிபெயர்ப்புக்கள், விளக்கவுரைகள், என்பவற்றோடு வெளியிட்டமை, வேறும் பல கல்வெட்டுக்களை வாசித்து அவற்றின் வாசகங்களை விளக்கவுரைகளோடு வெளியிட்டமை போன்ற பிரதான பணிகளாக முன்னிறுத்தப்படுவதைக் காணலாம் (பத்மநாதன்.சி.,2006,ப.18). குறிப்பாக வணிககணங்கள் தொடர்பான இவரது கல்வெட்டு இலங்கையின் இடைக்கால வணிகர்கள் பற்றிய ஆராய்ச்சிக்குப் பெரும் பங்களிப்பினை வழங்கியமை குறிப்பிடத்தக்கது. சிலகல்வெட்டுகள் வேலுப்பிள்ளையின் சமகாலத்தவரான இந்திராலாவினாலும் தொகுக்கப்பட்டன. இந்திரபாலா பல கல்வெட்டுகளை வாசித்து அவற்றை Epigraphica Tamilca என்ற தொகுப்பாக வெளியிட்டிருந்தார். இது குறித்து பத்மநாதனின் கருத்துக் கவனத்துக்குரியதாகின்றது "இருவரும் பரஸ்பரத் தொடர்புகளின்றி ஒரே கல்வெட்டுகளை இருவரும் தனித்தனியாக ஏககாலத்தில் வெளியிட்டனர்" எனக் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது (மேற்படி,ப.16). ஆனால் வேலுப்பிள்ளை, இந்திரபாலாவும் கல்வெட்டுத் தொகுப்பில் உதவியிருந்தார் எனவும் தாம் இருவரும் சுகந்திரமாக தனித்தனியாக வேலைசெய்திருந்தோம் எனவும் குறிப்பிடுவது கவனிக்கத்தக்கது. எவ்வாறாயினும் இருவரும் மேற்கொண்ட கல்வெட்டு படிகளை தொகுக்கும் முயற்சி,மற்றும் கல்வெட்டாய்வுகள் தமிழர் வரலாற்றை உறுதியான சான்றாதாரங்களுடன் நிறுவ உதவியுள்ளதெனலாம்.

**நிறைவுரை**

வேலுப்பிள்ளை தமிழ்த்துறை சார்ந்து பணியாற்றியபோதும் தமது ஆய்வுக்குத் தமிழ்க்கல்வெட்டுகளை அடிப்படையாகக் கொண்டமையானது, தமிழ்மொழியின் வரலாற்று வளர்ச்சியை மட்டுமல்லாது, அம்மொழி பேசியமக்களின் வரலாற்றினையும் பண்பாட்டினையும் எடுத்துரைக்கவும், நிலைநிறுத்தவும் அளப்பெரிய பங்களிப்பினை வழங்கியதெனலாம். கல்வெட்டு ஆய்வினை பரந்த புலமைத்துவத்தின் பின்னணியில் இலக்கியங்கியங்களோடு ஒப்பிட்டு ஆராய்ந்து தமிழ்மொழியினதும், தமிழர் பண்பாட்டினது வேர்களையும், அவ்வேர்கள் தமிழகத்தோடு பின்னனிப் பிணைந்திருந்ததென்பதையும், உரிய சான்றுகளோடு நிறுவியுள்ளார். இலங்கையின் வடபகுதியிலும் சிங்களவரின் ஆதிக்கமே பரவியிருந்தது என்ற பரணவிதானாவின் கருத்தை மீளாய்வுக்கு உட்படுத்தியமை தமிழர் வரலாற்றுக்குச் செய்த அளப்பெரும் பங்களிப்பாகும். இலங்கையில் பாரம்பரியமாகத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பதை கல்வெட்டுச் சான்றுகளின் துணைக்கொண்டு எடுத்துரைத்தார். திராவிட மொழியியல் மற்றும் தொல்லெழுத்துப் பின்புலத்தில், பல்துறை ஆற்றலுடன் ஒரு ஆளுமைமிக்க அறிஞராக வேலுப்பிள்ளையின் ஆளுமையை மதிப்பிடமுடிகின்றது.

**உசாத்துணைகள்**

Vellppillai.A.,(1964), A study of the language of Tamil inscriptions of the period 800.to 920 AD, keble college,Oxford, London.
Vellppillai.A.,(1967),Viracoozhiyam - as a Grammar of inscriptional Tamil, reprinted from the university of Ceylon review, vol.xxv. Nos.1&2
Vellupillai.A.,(1979-80 ) Tamil inflence in ancient Srilanka with Specil reference to early Brahmi inscriptions, Journal of Tamil studies,vol.16 & 17.
Velluppillai,A.,(1980), Epigraphical evidences for tamil studies, international Institute of Tamil Studes, madras.
Vellupillai.A.,(1981), "Tamil in ancient Jaffna and vallipuram gold plate", Journal of Tamil studies, Royal Asiatic Society, vol.16 & 17, Madras.
Velluppillai.A.,1971, Ceylon Tamil Inscriptions, pt.1, Royal printers, Peradeniya.
Velluppillai.A.,1972, Ceylon Tamil Inscriptions, pt.11, Royal printers, Peradeniya.
Paranavithane.P.,(1970) Inscriptions of Ceylon: Early Brahmi inscriptions,The department of Archaeology,vol.xvi ceylon, Colombo
குணசிங்கம்.,செல்லத்துரை,(1977),வல்லிபுரத்துப் பொன்னேட்டின் வரலாற்று முக்கியத்துவம் ஒரு மறுமதிப்பீடு, துன்னாலை ஸ்ரீவல்லிபுர ஆழ்வார்சுவாமி கோவில் திருக்குடமுழுக்கு மலர், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார்சுவாமி கோவில் மகாசபை
சிவசாமி.வி.,(1972),"ஈழத்துத் தொல்பொருளியலும் தமிழியலும்"பாவலர் துரையப்பாபிள்ளை நூற்றாண்டு விழாமலர், நூற்றாண்டு விழாச்சபை வெளியீடு, மகாஜனக் கல்லூரி,தெல்லிப்பழை.
சுப்பராயலு.எ.,இராசு.(பதி.),(2001), தமிழ்க் கல்வெட்டியலும் வரலாறும், தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
பத்மநாதன்.சி.,(2006) இலங்கைத் தமிழ்ச்சாசனங்கள், (கி.பி.700- 1300), இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம்,கொழும்பு
புஷ்பரட்ணம்.ப.,(2001)பண்டைய இலங்கையில் தமிழும் தமிழரும், கொழும்புத் தமிழ்ச் சங்கம், கொழும்பு.
வேலுப்பிள்ளை., (1971), "சாசனமும் தமிழும்",நெஷனல் பிரிண்டர்ஸ், கண்டி.
வேலுப்பிள்ளை,ஆ.,(1985), "தமிழர் சமய வரலாறு", பாரி புத்தகப் பண்ணை, சென்னை.
வேலுப்பிள்ளை,ஆ.,(2009), ஈழத்துப் பழைய இலக்கியங்கள் வரலாறு தேடல், குமரன் புத்தக இல்லம், சென்னை,கொழும்பு.